# PRESS NOTE

On 29-5-2019, Tr.B.Somasundaram, S/o Balasingam, approached the Vigilance & Anti – Corruption, Coimbatore has given a complaint stating that Tr.Anandakumar, who is working as Office Assistant to A1. Tr.Saravanan, ATPO, South Zone Office, Coimbatore Corporation had on 23.5.2019 demanded Rs.6,00,000/- bribe money on behalf of A1.Saravanan and Rs.50,000/- to TPO for need of layout approval for 4.76 acres in the name of Tmt.Suguna, with whom the complaint had entered into a sale agreement and a letter has to be given from Coimbatore Corporation. Later on the request of the complainant the A1 Saravanan reduced the amount to Rs.5,00,000/- and instructed the complainant to the give half the amount Rs.2,50,000/- as advance to his assistant Tr. Anandkumar and the remaining amount to be given after getting the approval. Accordingly a case was registered and a trap was organized.

During the course of trap proceedings, the accused A2 Tr.Anandakumar, reiterated the demand and received the bribe amount of Rs.2,50,000/- from the complainant. Later both the accused A1 & A2 were arrested and sent for judicial custody.

பத்திரிக்கை செய்தி குறிப்பு

கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம், டி.பி.ரோடு ரெட்ரோஸ் பிளாசா, க.எண்.509/P3 என்ற முகவரியைச் சாா்ந்த திரு.பாலசிங்கம் என்பவரின் மகன் திரு.சோமசுந்தரம் என்பவா் 29.05.2019 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பணிபுரியும் உதவி நகரமைப்பு திட்ட அலுவலர் திரு.சரவணன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ஆனந்தகுமார் ஆகியோர் மீது ஒரு எழுத்து மூலமான புகாரை கொடுத்தார். அதில், திருமதி.சுகுணா மற்றும் திருமதி.சாந்தினி என்பவர்களுக்கு சொந்தமாக செல்வபுரம் குமாரபாளையம் கிராமத்தில் 4.76 ஏக்கர் நிலம் உள்ளதாகவும் மேற்படி நிலத்தை அபிவிருத்தி செய்து, தான் அந்த நிலத்திற்கு LPA அப்ரூவல் பெற்று லே–அவுட் போடுவதற்காக கோவை மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகம் சென்று உதவி ஆணையர் அவர்களை சந்தித்து விண்ணப்பம் கொடுத்ததாகவும், உதவி ஆணையரின் அறிவுரை பேரில் தான் ATPO திரு.சரவணனை சந்தித்து திட்ட அனுமதி பெற நிலத்தையும் ஆவணங்களையும் ஆய்வு செய்து ஒப்புதல் கடிதம் கொடுக்க கோரி கேட்டதாகவும் திரு.சரவணன் தனது உதவியாளர் திரு.ஆனந்தகுமாரை இது சம்மந்தமாக சந்திக்க சொன்னதன்பேரில் தான் 23.05.2019 காலை 11.00 மணிக்கு திரு.ஆனந்தகுமாரை சந்தித்தபோது அவர் ரூ.600000/– ஐ ATPO திரு.சரவணனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகவும் அதற்கு அவ்வளவு பணம் கொடுக்க முடியாது சற்று குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு ரூ.500000/–கொடுக்க வேண்டும் என்றும் முன் பணமாக ரூ.2,50,000/– ஐ கொடுக்க வேண்டும் என்றும் இறுதி அப்ரூவல் வந்த பின்னர் மீதி பணம் ரூ.2,50,000/– கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும் அவ்வாறு தரவில்லை என்றால் தான் கேட்ட கடிதத்தை LPA க்கு அனுப்ப முடியாது என்று சொன்னதாகவும் தனக்கு அவ்வாறு பணம் கொடுத்து மேற்படி கடிதத்தை பெற விருப்பம் இல்லை என்றும் அவர்கள் மீது நடிவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார்.

அவருடைய புகாரின் அடிப்படையில் 29.05.2019 ம் தேதி பகல் 14.30 மணிக்கு கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2019/AC/CB u/s 7(a) & 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி திரு.சரவணன் மற்றும் திரு.ஆனந்தகுமார் ஆகியோர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக அவர்களை பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த பொறி வைப்பு நிகழ்வின் போது 29.05.2019 ம் தேதி இரவு மேற்படி திரு.ஆனந்தகுமார் புகார்தாரர் திரு.சோமசுந்தரத்தின் அலுவலத்தில் வைத்து சந்தித்தபோது ரூ.2,50,000/– ஐ கேட்டு பெற்று கொண்டார். அப்போது அவர் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு அதன் பின்னர் திரு.சரவணன் அவர்களை மேற்படி அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரணை மேற்கொண்டு இருவரையும் கைது செய்து திரு.ஆனந்தகுமாரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.2,50,000/– ஐ கைப்பற்றப்பட்டு மேற்படி இருவரும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.